உ

சிவமயம்.

# சேது பர்வதவர்த்தனியம்மை
# பிள்ளைத்தமிழ்.

இஃது

இராமேசுரம் திருப்பணி ஆனரரி ஏஜண்டு

கண்டனூர் ஸ்ரீமாந்

நா. பெ. நா. மு. முத்துராமையா அவர்கள்

விருப்பத்தின்படி

சேற்றூர்ச் சமஸ்தான வித்துவான்

ஸ்ரீமத்

மு. ரா. அருணாசலக்கவிராயரவர்கள்

இயற்றப்பெற்றது.

மதுரை:

விவேகபாநுப்பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

(முதற்பதிப்பு)

இதன்விலை அணா 4.

*Copyright Registered.*

**1906**

# முகவுரை.

பிள்ளைத்தமிழ் என்பது பிள்ளையின் பருவச் செயல்க
ளைப்பற்றிக் கூறுந் தமிழ் எனவிரியும். இப்பிள்ளைத்
தமிழ், முன்னோர் வகுத்த தொண்ணூற்றாறுவகைப் பிரபந்
தங்களுள் ஒன்றாம். ஆசிரியர் தொல்காப்பியனார், இப்பிரப
ந்தவிலக்கணங்கள் இன்னின்னவெனக் கூறினாரில்லையாயினும்
"விருந்தேதானும், புதுவது கிளந்த யாப்பின் மேற்றே"
(தொல்-பொரு, செய்யுளியல்......) என்பதனால், இவற்றை
"விருந்து" என்னும் பகுதியுள் அடக்கிக்கூறினார். விருந்து-
புதிதாகத் தாம் வேண்டியவாற்றாற் பலசெய்யுளுந்தொடர்ந்து
வரப்பாடுவது. இவற்றுட் பிள்ளைத்தமிழ் ஆண்பாற் பிள்
ளைப்பாட்டு, பெண்பாற் பிள்ளைப்பாட்டு என இருவகைப்ப
டும். இப்பாட்டுத் தாதியர் கூற்றாகப் பாடுவதென்றார் திரா
விட மகா பாஷிய கர்த்தராகிய சிவஞானயோகிகள்; தந்தை,
தாய், பாட்டன், பாட்டி கூற்றாகப் பாடுவதென்பாருமுளர்.
ஆண்பாற்கு;—காப்புடன் செங்கீரை, தால், சப்பாணி, முத்
தம், வாரானை, அம்புலி, சிற்றில்சிதைத்தல், சிறுபறைமுழ
க்கல், சிறு தேருருட்டல் எனப் பத்துப்பருவங்களும், பெண்
பாற்கு;--மேற்கூறியவற்றில் இறுதியினின்ற சிற்றில்முதலிய
மூன்றும் நீக்கி, அவ்விடத்தில் அம்மானை, நீராடல், ஊசல்
என்னும் மூன்றையுஞ் சேர்த்துப் பத்துப் பருவங்களுங் கூறு
வர். இவற்றுள் க. காப்பாவது, திருமால், சிவபிரான், விநா
யகர், முருகக்கடவுள், பிரமன், இந்திரன், இந்திரை, சரசு
வதி, சத்தமாதர், முப்பத்துமூவர்—என்றிக் கடவுளரை,
பிள்ளையைக் காக்கும்பொருட்டு வேண்டிப்பாடுவது. உமா
தேவி முதலியோரைப்பற்றிய பிள்ளைப்பாட்டில் மேலேகூறி
ய கடவுளர் சிலரைக் குறைத்துங் கூட்டியுங் கூறுவதுண்டு.

உ. செங்கீரைப்பருவம்:--அஃதாவது, பிள்ளைகள் ஒரு காலை முடக்கி ஒருகாலை நீட்டி இருகைகளையும் நிலத்திலூன்றித் தலைநிமிர்த்து முகமசைத்தாடும் நிலை

௩. தாலப்பருவம்:—அஃதாவது, பிள்ளைகளைத் தொட்டிலிற்கிடத்தி மாதர் நாவசைத்துப்பாடும் நிலை. தால் - நா.

௪. சப்பாணிப்பருவம்:—அஃதாவது, கையுடனே கை சேர்த்துக் கொட்டும் நிலை.

௫. முத்தப்பருவம்:—அஃதாவது, பிள்ளையினது வாய்முத்தத்தை விரும்பிக்கூறும் நிலை.

௬. வருகைப்பருவம்:—குழந்தையை, நடந்து வருக என்று அழைக்கும் நிலை.

௭. அம்புலிப்பருவம்:—அஃதாவது, பாட்டுடைப்பிள்ளையுடன் விளையாடவரும்படி மாதர் அப்பிள்ளையை ஒக்கலையிலிருத்திவைத்துக்கொண்டு சந்திரனைச் சாமபேத தான தண்டங்களாற் கூறியழைக்கும் நிலை.

௮. சிறுபறைப்பருவம்:—அஃதாவது, பாட்டுடைக் குழவியைச் சிறுபறை கொட்டும்படி வேண்டும் நிலை.

௯. சிற்றிற்பருவம்:—அஃதாவது, சிற்றிலிழைக்கும் சிறுமியர்தஞ் சிற்றிலைச் சிதைக்கவேண்டாவென்று பாட்டுடைக்குழவியை வேண்டும் நிலை.

௰. சிறுதேர்ப்பருவம்:—அஃதாது, பாட்டுடைக்குழவியைச் சிறுதேருருட்டும்படி வேண்டும் நிலை.

இவற்றுள்ளே, ஆண்பாற் பிள்ளைத்தமிழ்க்கே சிறந்த இறுதி மூன்று பருவங்களுக்கும் பிரதியாகப் பெண்பாற் பிள்ளைத்தமிழ்க்குக் கூறப்படும் அம்மானை நீராடல் ஊசல் என்னும் மூன்றனுள்;

௮. அம்மானைப்பருவம்:—அஃதாவது, அப்பெண்பிள்ளை பலநிற வம்மனையை யெடுத்து மாறிமாறி யெறிந்தாடலைக் கூறும் நிலை.

௯. நீராடற்பருவம்:—அஃதாவது, புதிய வெள்ளநீராடுதலைக் கூறும் நிலை.

௰. ஊசற்பருவம்:—அஃதாவது, பொன்மணிகளாற் செய்யப்பட்ட ஊசலினிருந்து மகிழ்ந்து விளையாடலைக்கூறும் நிலை.

இப்பருவங்களுள் முதலதாகிய காப்பு, பிள்ளை பிறந்த மூன்றுமாதம் வரை கூறப்படும்; ஏனைய ஒன்பது பருவங்களும் அம்மூன்றுமாதந் தொடங்கி, ரு, எ, கூ, கக, கங, கரு, கஎ, க௯, உக—இவ்வொற்றை யெண்கொண்ட மாதங்களில் முறையே கூறப்படுவன என்றும், மூன்று, ஐந்து, ஏழு ஆண்டு வரையும் சொல்லுதலுங்கொள்வர் என்றும் பன்னிருபாட்டியலிற் கூறுவர். இவற்றுட் பன்னிருபாட்டியலிலே, ஆண்பாற்குப் பதினாறு வயதுவரையும் பெண்பாற்குப் பூப்புநிகழுமளவும் பிள்ளைப்பருவங் கொள்ளலுமுண்டென்று சொல்லப்பட்டுள்ளது. மேற்கூறிய பருவங்களிற் சில குறைத்துங் கூட்டியும் பண்டையோர் கொண்டனரென்பதும் முன்னூல்களாற் றெரியவருகின்றது. பிங்கலந்தையில் அடியில்வரும் சூத்திரத்தால் இதனைக் கண்டுகொள்க.

"பிள்ளைப் பாட்டுத் தெள்ளிதிற் கிளப்பிற், றிங்களிரண்டிற் றெய்வங் காக்கென, இன்றமிழ்ப் புலவரியம்பிய காப்பும், ஐந்தாந் திங்களிற் செங்கீரை யாடலும், ஆறாந் திங்களிற் கூறுதல் கற்றலோ, டேழாந் திங்களி னின்னமு தூட்டலும், எட்டாந் திங்களி னியற்று லாட்டலும், ஒன்பதாந் திங்களி னுபர்சப் பாணியும், பத்தினோ டொன்றின் முத்தங் கூறலும், ஆண்டு வரையி னீண்டுவரு கென்றலும், மதியீ ரொன்பதின் மதியை யழைத்தலும், இரண்டா மாண்டிற் சிறுபறை கொட்டலும், மூன்றா மாண்டிற் சிற்றில் சிதைத்தலும், நான்கா மாண்டிற் சிறுதே ருருட்டலும், பத்திற் பூணணி பன்னீ ராண்டினிற், கச்சொடு சுரிகை காமுறப் புனைதலென், றின்னவை பிறவு மாகு மவற்றுள், முன்னர் மொழிந்த வொழிந்தவற் றேடும், பெற்ற ஆண்பாற் பிள்ளைப் பாட்டாம், முன்னுறக் கிளந்த ஆண்டினுள்வரை, இசைத்த பாட லிருபாற்கு முரித்தே"

"பேணுஞ் சிறப்பிற் பெண்மக வாயின், மூன்று மாண்டிற் குழமண மொழிதலும், ஐந்தின் முதலா வொன்பதின்

காரும், ஐங்கணைக் கிழவனை யார்வமொடு நோற்றலும், பனி நீர் தோய்தலும் பாவை யாடலும், அம்மனை கழங்கு பந்தடித் தாடலும், சிறுசோ றடுதலுஞ் சிற்றி லிழைத்தலு, மூசலாட லுமென் றிவை யுள்ளிட்டுப், பேசிய பெண்பாற் பிள்ளைப் பாட்டே." எனக் கண்டுகொள்க. முன்னூல்களில் இவ்வாறு பருவங்களும், காலஅளவும் பலவேறுவகையாகக் காணப்படுவனவாயினும், மேற்கூறிய பத்துப்பருவமுமே இக்காலத்தாரால் பெரிதும் ஆட்சிக்குக் கொண்டுவரப்பட்டவை. இவைகள் பிள்ளைத்தமிழின் பொதுவிலக்கணங்கள்,

தேவை யென்னுந் திருவிராமேச்சரத்தில் திருக்கோயில் கொண்டருளும் அருட்பரஞ்சோதியாகிய இராமநாதமூர்த்தியின் மகிமையையும் அக்கடவுளது அருட்சத்தியாயெழுந்தருளியுள்ள பர்வதவர்த்தனியம்மையின் மகிமையையும் இவ்வுலகம் நன்கறியும். இப்புண்ணிய தலத்தின் தேவஸ்தான விசாரணை கர்த்தாவும், தேவிகோட்டை ஜமீந்தாரும், சங்கீத சாஹித்ய விற்பன்னரும், செல்வச்சிறப்புக்குத் தக்க நற்குணங்கள் பலவும் அமைந்தவரும், பெரும்புகழ் வள்ளலுமாகிய ஸ்ரீமாந்-அள. அரு. ராம. அருணசலஞ்செட்டியா ரவர்களைத் தமிழர் பலரும் அறிவர். இப்பிரபுசிகாமணியவர்களின் விருப்பத்தின்படி இவ்விராமேசுரந் திருப்பணி ஆனரரி ஏஜண்டாயிருந்து நவநிலைக்கோபுர முதலிய பல்பெரும்பணிகளைச்சில் பொழுதில் முடித்தவரும் சிற்பநூலாராய்ச்சியும் சாஸ்திரவாராய்ச்சியும், பெரிதும்வாய்ந்தவரும் வைதிக ஒழுக்கமாட்சியாளருமாகிய கண்டனூர் ஸ்ரீமத்-நா.பெ. நா. மு. முத்துராமையா அவர்கள் ஷை திருப்பணிவேலையை நடாத்திவருங்காலையில் மேலேகூறிய ஸ்ரீமாந்: அருணசலஞ் செட்டியாரவர்கட்குப் புண்ணிய குமாரனுதிக்க அனுக்கிரகித் தருளும்படி பர்வதவர்த்தனியம்மைமீது ஒரு பிள்ளைத்தமிழ் பாடுவிக்க நினைந்து சேற்றூர்ச் சமஸ்தான வித்துவானும், வரன்முறையாகத் தமிழுணர்ந்தவரும் கவிபாடுந் திறமை நன்குபெற்றவரும் ஆகிய

ஸ்ரீமத்-மு. ரா. அருணாசலக்கவிராயரவர்களுக்கு அறிவித்தனர். கவிராயரவர்களும் மிகமகிழ்ந்து அம்பிகையின் திருவருளைச் சிந்தித்துப் பெண்பாற்பிள்ளைத்தமிழின் இலக்கணநிரம்பவும், சொற்சுவை பொருட்சுவை நிறையவும், உருக்கநயம் செழிக்கவும், அத்தலபுராணக்கதைகள் பெரும்பாலன வெளிப்படவும் இப்பிள்ளைத்தமிழை இனிது பாடிமுடித்தனர். அங்ஙனம் முடித்தவுடனே அருணாசலஞ்செட்டியாரவர்கள் நற்றவப்பலனும், முத்துராமையாஅவர்கள் உத்தமசிந்தை வலியும், அருணாசலக்கவிராயரவர்களின் வாக்குவிசேடமும், பர்வதவர்த்தனியம்மையின் திருவருளும் கைகூட ஜாநகிநாத செட்டியாரவர்கட்கு அருமருந்தன்ன ஆண்மகவு உதித்தது.

அதுகண்டு யாவரும் பெருமகிழ்ச்சியுற்றனர் செட்டியாரவர்கள் பிள்ளைத்தமிழைப் பர்வதவர்த்தனியம்மை சந்நிதியிலே யரங்கேற்றுவித்து கவிராயர்அவர்கட்கு நன்கு சம்மானமளித்தனர்.

இந்நூலின் முதலதாகிய காப்புப்பருவம் முதற்செய்யுளின் உலகமாதி என்னு முதற்சீரானது

“தொகுத்துரைத்த மங்கலஞ் சொல்லெழுத்துத் தானம்
வகுத்தபா லுண்டி வருணம்—பகுத்தநாள்
தப்பாக் கதிகணமென் றீரைந்தின் றன்மையினைச்
செப்புவதா முன்மொழியின் சீர்.”

என்னும் விதிப்படி மங்கலப்பொருத்தமும் வகையுளிசேர்தலாதி யீறுகிரிதலிறுதியான குற்றங்களின்மையாகிய சொற்பொருத்தமும், ஐந்தெழுத்தாகிய எழுத்துப்பொருத்தமும், அரசனாகிய தானப்பொருத்தமும், பொதுவகையாற் பெண்பாற்பொருத்தமும், அமுதமாகிய உணாப்பொருத்தமும், அந்தணராகிய சாதிப்பொருத்தமும், பூராடமாகிய நக்ஷத்திரப் பொருத்தமும், தேவகதிப் பொருத்தமும், திங்களாகிய கணப்பொருத்தமுமாகிய பத்துப்பொருத்தமுங் கொண்டுள்ளது.

பிறவும் இந்நூலின் ஆங்காங்குள்ள நயங்கள் பலவும் காண்பார் வியந்து பாராட்டத்தக்கனவேயாம்,

இங்ஙனம்

**கவிராஜ நெல்லையப்பபிள்ளை,**

**திருநெல்வேலி.**

# சாற்றுக்கவிகள்.

துரைத் தமிழ்ச்சங்கம் சேதுபதி செந்தமிழ்க்கலாசாலை
உபாத்தியாயர் பிரும்மஸ்ரீ

## சுந்தரேசுவர ஐயர் அவர்கள்

இயற்றியவை.

—:o:—

லவளர்திண் புயன்றேவை வாழருணா சலவள்ளிக
செல்வக் கோமான்
லவளர்புத் திரப்பேறுந் தவணியின்மே லெந்நாளுங்
களிப்பாய் வாழ
லவளர்தண் கடல்சூலவுஞ் சேதுரா மேசுரத்தி
லரன்பா தஞ்சேர்
லவளர்கா தலித்தாய்மே லொருபிள்ளைத் தமிழ்க்கவிதை
வழுத்தும் வண்ணம். (க)

த்தகுதாய் திருக்கோயிற் றிருப்பணிகள் விருப்பமுட
னமைப்போன் பூதி
பத்தருகண் டிகைபுனைவோன் கல்வியறி வொழுக்கமெலா
மேவப் பெற்றோ
த்தமசற் குணன்றமிழுக் குபகாரி பிறர்க்குமஃ
தாபதே சிப்போன்
த்தமிழ்தேர் கண்டனூர் முத்துரா மன்விரும்ப
மொழிந்தான் மன்னோ. (உ)

ன்னவன்றென் சேறைமன்ன னவைப்புலவர் தமிற்றலைவ
னறிவான் மிக்க
பான்னவரா மிராமசா மிக்கவிரா னரியதவப்
புதல்வ னானோன்
ன்னவருந் தமிழ்க்கந்த சாமிசுப்ர மண்யனிரு
பாவல் லோர்க்கும்
ன்னவனென் னுயிர்த்தோழன் முத்தமிழ் திரம்பவரன்
முறையிற் கற்றோன். (௩)

பவம்பெற்றார் காணாத பரமனடி யருச்சனைசொற்
பாட்டே யென்று
சிவம்பெற்ற வுள்ளமொடு தினந்துதிப்போன் பரங்கிரிவாழ்
சேய்க்குஞ் சேறைத்
தவம்பெற்ற நாயகிக்கு மகிழ்சிறப்ப விருபிள்ளைத்
தமிழ்முன் செய்து
நவம்பெற்ற தமிழ்ச்சங்கப் புலவனரு ணாசலப்பேர்
நாவல் லோனே. (ச)

---

திருவாவடுதுறையாதீனத்து வித்துவானும் மதுரைத்தமிழ்ச் சங்கத்துச் சைவநூற் பரிசோதகரும் ஆகிய

ஸ்ரீமத்

## சே, ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்களியற்றிய செய்யுட்கள்.

உலகினிலெவ் வகையரே யாயிடினுந் தனதுபொரு
ளுதவி கொள்ளா
ரிலரெனவூ ருணிநீர்போ லிருநிதியும் பெருக்கியவ
னொம்மைப் போலப்
பலர்புகழுந் தேவைநகர் வாழுமரு ணாசலவேள்
பகர்சந் தான
நலமுறவே தழைத்தோங்கத் திருவிரா மேச்சுரமா
நற்ற லத்தில். (க)
மலைவளர்கா தலியுமைமேன் மதுபருக்கம் வாய்க்கொள்வார்
மகிழு மாபோ
லிலகுசெவி வாய்க்கொள்வா ரருந்திடப்பிள் ளைத்தமிழொன்
றிசைத்தா னெங்கள்
குலகுருவாந் துறைசைநம சிவாயதே சிகனருள்போற்
குலவுங் கல்வி
யலகிலா துறவமைசேற் றாரருணா சலக்கவிஞ
னறிஞ ரேறே. (உ)

---

ஸ்ரீவில்லிபுத்தூர்த்தாலூகா குன்னூர்ப்பெரியவீடு
வித்துவான் ஸ்ரீமத்

## குமாரசுவாமி முதலியாரவர்களியற்றியவை.

ருவதன தனைநிகருஞ் செல்வவென்றே வரும்புகழுந்
தீரன் கற்ப
ருவதனை நிகர்கண்ட னூர்முத்து ராமவள்ளற்
சரதன் வேட்ப
வாருவதன மைந்தாக வுறாமிரா மேசரிடத்
துறையென் றுயாம்
நவதவர்த தனியம்மை மீதுபிள்ளைத் தமிழென்னும்
பனுவ றன்னை. (௧)

முத்தி யானமிசை வருஞான சம்பந்த
வள்ள லென்னத்
நமுத்தி யானங்கள் செறிந்திலங்கி யோங்குபெருஞ்
சிறப்பு வாய்ந்த
ாமுத்தி யாணமசி வாயதே சிகவரசற்
குருபா னூலெல்
முத்தி யாக்கேட்டுள் ளையமறக் கற்றுணர்ந்த
வதுல னம்மா. (௨)

ந்தசனை யொத்தவெழிற் சிதரன்சுப் பிரமணிய
செல்வன் றன்னைச்
தவித ரணசுமுக சுகமதுர கவிசொல்கந்த
சுவாமி யென்னு
த்தமனைச் சோதரரா வுறப்பெற்றே னெனையுமவ்வா
றுளத்துட் கொண்ட
ந்தகனைத் தகையோரும் புகழுருணு சலக்கவியாம்
விவேக மிக்கோன் (௩)

க்திரமிங் கெடுத்ததனு லாயபெரும் பயனுறவே
கருதி மேலாஞ்
க்திரத்தின் கருத்தினே டரியபெருங் கற்பனையுந்
தழுவி யாருங்
ாத்திரஞ்செய் யும்படிசொற் சுவையொடும்பா டியிராமேச்
சுரமென்றோதுங்
த்திரத்தவ் வம்பிகைசந் நிதியிலரங் கேற்றியுள்ளக்
கிளர்ச்சி மேவி, (௪)

சேதுபதி யெனும்ராம நாதரோ ரைந்துகரச்
செம்மல் செவ்வேள்
கோதுபதி யாதமா தவராஞ்ச னேயரெனக்
கூறு மின்னோர்
மீதுபதி கப்பாவெப் பாவினுமே லாகவதி
விவேக ரன்றி
யோதுபதி தருங்கூட வுவந்துகேட் டுணர்ந்துயுமா
றுரைத்தான் மன்னோ. (௩)

---

தென்காசித்தாலூகா வெள்ளநால் ஸ்ரீமாந்

வெ. ப. சுப்பிரமணியமுதலியாரவர்களியற்றியவை.

ஒருவரிரு நீர்முத்தாற் றிடுபொருளா ரூர்க்குளத்தி
லுற்ற வாறே
பெருகுகங்கை மூழ்குபலம் பல்லோரு மெத்தலத்தே
பெறுவா ரந்தத்
திருவிரா மேசுரத்தீ சர்க்குப்பிரே யாதலன்றித்
தேக மும்மா
மருவிவ்வலப் பாகமமர் பருவதவர்த் தனியம்மை
மலர்த்தாண் மீதே. (௧)

செய்யபிள்ளைக் கவிமாலை புனைகெனநாட் டுக்கோட்டைச்
செட்டி மார்கண்
மையறுநற் குலம்விளங்கக் கண்டனூர் துலங்கவரு
வள்ள லந்தச்
சைவதலத் *தளிக்கிழைக் கோபுரங் கட்டியபரம
தருமன் வேதத்
தெய்துமுடி புணர்முத்து ராமநா மக்குரிசி
லிசைத்தா னுக. (௨)

சேதுபுரா ணக்கருத்துச் செறிதரநற் பத்திரசஞ்
சிறப்ப வந்து
லோதியந்த வம்மையின்சந் நிதியில்விசு வாவசுவென்
றோங்கு மாண்டி
லேதமிலா மாசிமதிவருஞ் சிவராத் திரியிலரங்
கேற்றி னூற்
றீதறுசேற் றாரருணு சலக்கவிரா யத்திருப்பேர்ச்
சீரி யோனே. (௩)

---

*தளி—கோவில்.

ந்தியின்றே கத்தோல்போர்த் திடமிரா மேச்சுரரின்
வருளா லோங்கு
ந்தியின்றே னெழுகுறச்செய் பருவதவர்த் தனிபிள்ளைப்
பாவைப் பார்த்தோர்
ந்தியின்றே பெற்றேய்யா மதனிலுறு நயமொன்று
முற்றக் கூறச்
ந்தியின்றே யென்னிலத வருமையினைத் தமியேனே
சாற்று கேனே. (௬)

---

காழி ஐஸ்கூல் தமிழ்ப்பண்டிதராகிய திருவாவடுதுறை ஆதீனம்

## ஸ்ரீமத் பொன்னோதுவாரவர்கள் இயற்றிய
## ஆசிரியப்பா.

திருவளர் சேதுவிற் சிவன்வலப் பாலமர்
பருவத வர்த்தனி பகருமம் மையின்மேற்
சேதுமான் மியஞ்சிற் சிலவிடத் தமையவும்
நிதில்சொன் னயமொடு சேர்பொரு ணன்னய
மாரவு மியாவரு மறிவுறு மெளிமை
சேரவு மன்பாற் செந்தமிழா லொரு
பிள்ளைத் தமிழினைப் பீடுறு புலவர்
கொள்ளைகொண் டிடவே குலவு மைக்கறைக்
கண்டனூ ராகிய கண்டனூ ரதனிற்
சண்டனூர் சார்தராச் சால்பொடு வாழ்வோன்
முத்துரா மன்னென மொழியுநா மத்தோன்
மெத்துசெல் வத்தினன் மேன்மைசேர் வணிகன்
மற்றவா ணிகரெலாம் வாணிக மீங்கிவன்
பெற்றது போலநாம் பெற்றிலோ மென்றெணப்
பாடுவித் திடுதலே படிதனில் வாணிகங்
கூடுமென் றுட்கொடு கூறக் கூறினன்
சீருறு பாண்டிய தேச மதனி
லேருறு முகவூரெ னும்பதி யுதித்தோ
னன்றுறப் பவித்திருந் தழிந்தமுச் சங்கமு
மின்று*தான் றோன்றுதற் கிடங்கொடுத் தனபோ
லஞ்சாஞ் சங்கமொன் றுணுகற் கிடங்கொடா
தெஞ்சா தென்று மிலங்கிடு நான்காஞ்
செந்தமிழ்ச் சங்கஞ் சேர்ந்துமா மதுரையிற்
சுந்தர முறவே துலங்கரு ணாசல
நாமம் புனைந்த நாவ லோனே.

* தாமென்றது நான்காஞ்சங்கம்.

மதுரை விவேகபாநுப்பத்திராதிபர் மகா-ள-ள-ஸ்ரீ
எம். ஆர். கந்தசாமிக்கவிராயரவர்களியற்றிய

# சிறப்புப்பாயிரம்.

——:O:——

பூமகளென் பதைவிளக்கப் பூமகளா வந்துதித்த
பொற்பூங் கொம்பாங்
காமருசீ தையைமணந்த தாசரதி யரக்கரமர்
கடந்து மீண்டு
சோமகலச் சிவபூசை செயுஞ்சேது மான்மியத்தைச்
சொல்லா ருண்டோ
நாமவிசீ ரத்தலத்துப் பருவதவர்த் தனியம்மை
நற்றாள் போற்றி (௧)

எண்ணிரண்டு பேறுமொருங் கெய்தினோன் கருணைகுடி
யிருந்தற் கென்றே
கண்ணிரண்டும் பாரதிக்கே யகக்கண்ணு மினிதமைத்
கனக நாட்டோர் [தோன்
விண்ணிரண்டு போன்மெனக்கண் டையுறுந்தே வைப்
மேவி யிந்த [பதியில்
மண்ணிரண்டு நிதிக்கிழவ னெனும்ராம சாமிவள்ளல்
மைந்த னானோன். (௨)

சங்கீதப் பெருங்கடலுட் சாகித்யப் புணைசெலுத்துந்
தக்கோன் மேன்மைச்
சிங்காச னாதிபர்க்குஞ் செயிர்துடைத்து நிதியளிக்குஞ்
செல்வன் பூத்த
பங்கேரு கானனத்தான் கற்பகமாங் கரதலத்தான்
பாவல் லோர்கள்
எங்கோனென் றெடுத்திசைக்குங் கீர்த்தியரு ணாசலப்
ரேந்த லானோன், [பே

# சிறப்புப்பாயிரம்.

கல்வியறி வூகமிகு சொக்கலிங்க மகாராஜ
கனபூ மானைப்
பல்வகையா லுலகுபுகழ் வெள்ளையபூ பதியையன்பு
பாரித் தியாரும்
நல்விரத னுயர்சரத னென்னுநா ராயணப்பேர்
நாட்டுங் கோவைத்
தொல்வலிமை மிகப்படைத்த சோதரராக் கொண்டு
துலங்க வாழ்வோன். [நலந்

திக்கொருநான் கையும்புரக்குந் திறமிகுமிந் நால்வருறு
சிறப்பு நோக்கின்
மிக்கவலித் தசரதனே ராமசுவா மிக்கோவாய்
மேவி யன்பு
தொக்கிருந்து நானிலங்காப் பதற்கென்றே யிந்நான்கு
சுதரை யீன்று
தக்கபுகழ் மகிழ்படைத்தான் றவவசியா லெனக்கருதுந்
தரணி மன்னே. (ரு)

திருக்கானப் பேர்க்கோயிற் றிருப்பணியுங்
கும்பாபி ஷேகமாதி
மருக்காலு மலர்மலிதெப் போற்சவமும் விதிமுறையில்
வயங்கச் செய்து
தருக்காணும் லவணபுர விநாயகர்க்குத் திருப்பணியுஞ்
சத்தி ரஞ்செய்
துருக்கார்வத் துடனிரா மேச்சுரத்துத் திருப்பணியு
மொளிரச் செய்தே. (சா)

வானவர்தம் மூரினிருந் திழிந்தேறுஞ் சோபான
வடிவாம் வாயிற்
றானமிக மருவியுயர் கோபுரமு மினிதமைத்த
தரும சீல
ஞானநய சுகுணமலி யவ்வருணா சலவேளுக்
கார்வங் கூரத்
தேனமர்வாய் மகப்பேறு கிடைப்பதற்கு நட்பியல்பாற்
சிந்தை கொண்டே. (எ)

மற்றொருதாய் வயிற்றினிடை வந்துபிள்ளைத் தமிழினி
வழுத்தா வண்ணஞ் [மேல்
சொற்றகுபிள் ளைத்தமிழ்ப் பருவதவர்த் தனித்தாய்
சொல்வா யென்னக் [மேற்
கற்றுணர்மு தறிவுடையான் வேதாந்த சித்தாந்தக்
கடலுட் டோய்ந்து
முற்றுசிவ ஞானமணி கைக்கொண்டோன் சிறப்பனைத்தி
முழுதுந் தேர்ந்தோன். (௪௮)

கண்டனூர் வாழுமுத்து ராமலிங்க பூபனுளங்
களித்துக் கூறக்
கொண்டெனக்குங் கல்விவல்லோர் குழாத்தினுக்கு முன்
குலவு மேன்மைத் [னவனுக்
தண்டமிழ்நா வலனருணா சலக்கவிஞன் பத்திரசந்
ததும்பச் சொற்றன்
றெண்டிரைசூ ழுஞ்சேது பருவதவர்த் தனிமகிழ்ச்சி
சிறப்ப மன்னே. (௪௯)

பருவதவர்த் தனியருளை யெங்களரு ணாசலபூ
பாலற் கின்ப
மருவவளர் சந்ததியா வந்ததியா வருமுளத்து
மகிழ்ந்தார் கற்ப
தருவனையா னத்தமிழை யரங்கேற்றி யச்சேற்றித்
தரணிக் கெல்லாந்
திருவமுது போலுதவிச் சிறப்பித்தான் பலநலமுஞ்
செழிக்கத் தானே. (௫௦)

முற்றிற்று.

இராமேசுரம் திருப்பணி ஆனரரி ஏஜண்டும் இந்நூல்

பாடுவித்தவரும் ஆகிய கண்டனூர் ஸ்ரீமத்

# நா. பெ. நா. மு. முத்துராமையா

அவர்களைப்பற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

---

சீர்மலி தண் பரவையொலி முழங்குமிரா மேச்சுரத்திற்
    செழிக்கு முல்லைத்
தார்மலியும் பருவதவர்த் தனியம்மை யார்பிள்ளைத்
    தமிழைப் பாவல்
லார்மலியுந் தேவைநகர் வாழருணா சலச்செட்டி
    யார்க்குச் சேய்நற்
பார்மலி வண்டாகச்சேற் றாரருணா சலக்கவிஞன்
    பாடினனே.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சேது பர்வதவர்த்தனியம்மை
# பிள்ளைத் தமிழ்.

——:o:——

## விநாயகக்கடவுள்.

சீரேறு வேதாகமப் பெருங் கோயிலுட்
சிவதத்துவத் தின்முடியாஞ்
சிங்கா தனத்தின்மேல் வீற்றிருந் தின்னருட்
செங்கோல் செலுத்துதன்னை
யேரேறு ஞானவிழி கொண்டுபிர ணவவாயி
லெய்தியுள் ளொட்டிநோக்கு
மியாவர்க்கு மின்முக மலர்ந்தருளு மும்பலா
மெம்பிரா னைத்துதிப்பாங்
காரேறு நிறவரக் கரைவென் றிராகவன்
கைதொழப் பிரமகத்தி
கடிதினி லகற்றிய விராமே சுரத்தினிற்
கண்கண்ட தெய்வமாகிப்
பேரேறு நற்றவர் தொழும்பர்வத வர்த்தனிப்
பெருமாட்டி யருள்பிறங்கும்
பிள்ளைத் தமிழ்க்கவிதை யுள்ளக்க ளிப்பினொடு
பெரிதா வளர்த்துவரவே.

# காப்புப்பருவம்.

## திருமால் துதி.

உலகமலியுங் குணநிதிச் செழியன் வேள்வியை
யுவந்திலக் குமியையுன்ன
மொருபுதல்வி யாகவர விட்டுப்பின் வந்தவளை
யுற்றொளிர்க ரம்பிடிக்க
விலகியவண் மீண்டுதன் றந்தைபா லேயது
விளம்பவவன் மேவினானுன்
மெய்ப்பிணித் தூக்கொண்டு போந்திரா மேசர்க்கு
மேற்றிசையில் விற்றிருப்பப்
பலகவலை யெய்துசிறை யிட்டவுட னுண்மையப்
பாண்டியன் சொப்பனத்திற்
பகர்ந்தருளி நற்சேது மாதவப் பேர்கொண்ட
பைந்துழா யண்ணல்காக்க
இலகுபே ரெழின்மணிகள் பலபதித் திடுமாட
மியையிரா மேசரத்தி
லிதமெய்த் தவந்தபரு வதவர்த்த னிப்பெணர
செனுநற் பிராட்டிதனையே. (க)

## சிவபெருமான்.

### வேறு

அகில சராசர மாகிய வுயிர்க
ளனைத்து மநாதியிலே
யார்க்குதன் முதலிய வைந்து மிருந்திய
மவயவ மறிவிக்கப்
பகிர்முக மாகவெழுந்தெதிர் நின்றருள் பதியப்
பொதி பொன்னம்
பலமிசை நடமிடு சின்மய வுருவப்
பரமனை வந்திப்பா

## காப்புப் பருவம்

மகிதல மதிலுயர் கயிலையு மேருவு
மானுமெ லுங்கந்த
மாதன முன்றிலி னருள்வடி வெய்திய
மலைவளர் காதலியைச்
சகியென வலைமகள் கலைமகள் சூழத்
தங்கிய தலைமகளைச்
சகலமு முதவிய தாயைக் களிமகிழ்
தந்துபு ரந்திடவே. (உ)

---

## விநாயகர்.

### வேறு.

கரியவா ணவமாயை கன்மமெனு மொருபெருங்
காட்டினை யழித்துவெண்மைக்
கலைநிலா விசுமதி மண்டலப் பெருவெளிக்
ககனத்து லாவிமேன்மே
லூரிய பேரன்பர்தற் போதக் கரும்பினை
யொடித்துண்டு ளூற்றிருந்தே
யூறிச் சுரந்தருண் மதம்பொழியு மைங்கரத்
தொருகொம் பொருத்தல்காக்க
அரியயன் றேவர்சொரி வெண்மலர்க் குவியல்க
ளனந்தவெண் கயிலையென்ன
லாயசீர் தருமிரா மேசுரம் பணிகின்ற
வர்க்கிந்த வுலகிலரசும்
பெரியவா னரசுமொரு பொருளென்ன மதியாத
பேரின்ப வாழ்வுநல்கும்
பிரியா நலத்தமலை வளர்கா தலிப்பெயர்
பிறங்குபெரு மாட்டிதனையே. (௩)

## முருகக்கடவுள்.

நற்கோ டிரிந்திட்ட காலத்தினுந் தனது
நாமமா மாறெழுத்துண்
ணவிலுமொரெழுத்தை யொரு தரமாயி னுஞ்சற்று
நாவுச் சரித்தநல்லோர்
முற்கோடி வந்துண் ணினைத்தவை முடித்தருளு
முகமாறு கொண்டமுதலை
முருகனைத் திருமாது மருகனைச் சிந்தித்து
முந்தித் துதித்துநிற்பாம்
விற்கோடி தீர்த்தத்தி லாடுவார் பாவங்கள்
வேரறப்போக்கி மேன்மேல்
வெண்டிரைக் கைகளாற் செம்மணியும் வெண்மணியும்
வீசியெழு பரவையென்றுந்
தற்கோடி நின்றுதிசை நான்கினுங் காத்திடத்
தருமிரா மேசுரத்திற்
றலையாய தெய்வமலை வளர்காத லியையமலை
தன்னைப் புரக்கவென்றே. (௪)

## பிரமதேவர்.

### வேறு.

உயிர்க ளியற்றுங் கன்மவகுப் புணர்ந்து
வேவ்வே றுடல்கரண
முலகம் போகம் படைத்துதவு முந்தி
மலரி னுதித்தவனைப்
பயிலு மொருநான் மறையவனைப் பதுமத்
திருந்த பண்ணவனைப்
பரவிப் பணிவாங் கடற்கரையின் பாங்க
ராமைப் பருமுதுகிற்
றுயில்செ யலவன் வெயில் காயுந்தூவி
ராமே சுரத்தில்வந்து
சுத்த விரத தவந்தானந் தொடங்கு
வாருக் கிம்மையிலே
மயிலேநிகர் சாயற் பெண்ணு மகவுந்தனமும்
வர வுதவும்
வளமார் கருணை நிறை யுமலைவளர்கா
தலியைக் காப்பதற்கே. (௫)

## தேவேந்திரன்.

### வேறு.

புதியமுத்த மணமதருமீ ரிருமருப்போர் மலையிற்
போற்றிசெயும் புலவர்பலர் நாற்றிசையுஞ் சூழ
நிதியமுற்ற வானுலகு நிலவியற்பே ரரசை
நீட்டியிரு கையொன்று கூட்டிவணங் கிவாக
துதிமுழக்க மிருபதியா மிதெனப் பாவலவர்
தோத்திரஞ்செய் திடுமிரா மேச்சுரங்கை தொழுவார்
மதியினிற்கு மலைவளர்கா தலியினைப்பா லவர்க்கு
வரந்தருசிந் தாமணியைப் புரந்தருளும் பொருட்டே.

## இலக்குமி.

### வேறு.

புலவிப் போரி லொருகலகம
புரிந்துமாலைப் புறத்தகற்றிப்
போந்து தநக் கோடியிற் பண்டு
பொருநைத்துறைவன் புதல்வியாய்
நிலவிப் பயிலும் போதுதலை
நீங்கல்பொறாம னேடியுயர்
நெடுங்கா வடியொன் றேந்தியந்த
நெடுமால் சேது நீணகரிற்
சுலவித் திரிந்து மலர்கொய்தன்
றொடித்தோள் பற்றத் தோழியர்கள்
சூழ நின்ற திருமகளைத்
தொழுவா மிராமே சுரமென்னுந்
தலவித் தகையை மலைவளர்கா
தலியை யிராமே சுரமணந்த
தையற் றெய்வ நாயகியார்
[illegible] கற்பொருட்டே. (எ)

## சரசுவதி.

### வேறு.

சகலவே தாகமபு ராணவிதி காசந்
 தழைந்திடத் தக்க தெய்வந்
தானாகி யைந்தொழிலி னுதித் தொழிற்குயர்
 சகாயநற் சத்தி யாகி
யகலாது தன்கணவ னுவிற்சு வைக்குமின்
 னமுதாகி வைகி யன்பர்க்
காசுமுத லியகவிகள் பாடும் படிக்கரு
 ளளித்தவளை யஞ்ச லிப்பாந்
துகளாய கொலைகளவு கட்காம முழுதுந்
 தொலைக்கும்வழி தொன்று தொட்டுத்
தொகுமிரா மேசுரம் புகுமிரா மேசர்தந்
 துணையடி கைதொழுது தன்னைப்
புகலா மெனச்சொல்வர் புலையரோ யாயினும்
 புத்தேளி ராக வருளே
புரிகாத லியையுமலை வளர்கா தலியைபுவகை
 பூத்தினிது காக்க வென்றே. (அ)

## சத்தமாதர்.

### வேறு.

உருவ நிறத்தணி வெள்ளைக் கமலத்
 துறலடி மாமே லுறைதரு மானூர்
பெருவி டையைச்சிறு புள்ளைச் சிகியைப்
 பிரியமொ டேர்வா ரரிமிசை போவார்
* தருவிதி யைச்செறு வள்ளைக் குழையைச்
 சமர்செய்கண் மாதா மிவரெழு மாதர்
பருவத வர்த்தனி தன்னைப் புரவு
 பயில்வரி ராமே சுரரரு ளாலே. (கூ)

## காப்புப்பருவம்.

# முப்பத்து முக்கோடி தேவர்.

### வேறு.

நிலவுலக வைப்பினின் மலரிலை யெடுத்துயர்
நேயமலி சித்தத்து வப்போடு பூசனை
நிதநித மியற்றுநர் மலரிலை யிருப்பினை
நீடுபெற முற்றக் கொடுத்தாளு மாதுமை
மலமிகு பவப்பிணி யலகறு மெமைத்தெறு
மாயவினை யைச்செற்று நட்பாக நாடொறு
மறைமுழுது மெய்த்துணர் வரியபத பத்மநன்
மாமலர் கலக்கச்செய் நற்றாய் தயாகரி
பலபல மதத்தினு மிலகிய வருட்சிலை
பாவலவர் மெய்த்துத் தனைப்பாடு மாகவி
பரிமள மணத்தொடு விரிமல ரெனப் புனை
பாசொளிய மெய்ச்சத்தி யப்பாவி யாமத
கலகமறு முத்தர்கள் பலருளமு நித்திய
காணியென வைத்துக் களித்தாடு சேதுவுங்
கலவுசிவ பத்தினி குலபார்வத வர்த்தனி
காவலவர் முப்பத்து முக்கோடி தேவரே. (௧௰)

## காப்புப்பருவம்

முற்றிற்று.

## இரண்டாவது

# செங்கீரைப்பருவம்

சீர்கொண்ட மழைவளம் பொழிசெழிய நாட்டிலொரு
நிலையினிற் கின்றசீர்த்தி
திகழ்கந்த மாதன மலைச்செழுஞ் சாரலி
னெடுங்கார் நிறத்திராமன்
வார்கொண்ட பூண்முலைச் சானகி யருச்சித்த
மணலிலிங் கத்தை யாங்கு
மன்னுதன் பெயர்முன்னர் வந்திடத் தாபித்து
வைத்துமா பூசைசெய்து
பேர்கொண்ட தன்னையினி வந்துபற் றுவிதம்
பிரமகத் தியையகற்றும்
பீடுறு மிராமே சுரத்தில்வரு மன்பர்தம்
பிறவிப் பிணிக்கருந்துஞ்
சீர்கொண்ட மாமருந் தாய்நின்ற பெண்ணரசி
செங்கீரை யாடியருளே
சிற்பரம யப்பர்வத வர்த்தனியெ னச்சொன்மயில்
செங்கீரை யாடியருளே. (க)

சுத்தகங் கையினைத் தெரிந்தெடுத் துக் கட்டு
தூயகா வடியை யன்பாற்
றோளிற் சுமந்துகா சியினின்று வருகின்ற
தொண்டர்தந் தொகுதி பலவு
நித்தலு மிராமலிங் கத்தினுக் கபிடேக நிகழ்வித்து
நின்று வாழ்த்தி
நேர்தொழு மிராமே சுரத்திற் றிருக்கோயி
னிலைகொண் டிருந்த நிமலா
யித்தலம் போலுமுயர் தலமில்லை யென்னல்போ
லினியநின் வதன மதிய
மிருபா லசைத்தசைத் திதுமனோ ரஞ்சித மெனக்காகு
மென்னல் போலச்
சித்தமகிழ் தரமிகவு மேல்கீ ழசைத்து நீ
செங்கீரை யாடியருளே
சிற்பரம யப்பர்வத வர்த்தனியெ னச்சொன்மயில்

கருமுகின் முழக்கமுங் கறையடி முழக்கமுங்
கடலெழு முழக்கமுஞ்செங்
கைகுவிக் குந்தொண்டர் வாய்த்துதி முழக்கமுங்
கதிர்மணி கொழிக்கும் வெண்மை
யருவியின் முழக்கமுந் தீர்த்தங்க ளிற்படிந் தாடுவர்
முழக்கமுஞ் சேர்ந்
தறுவிநு வெனச்சுட்டி யறியப் படாப்பிரம
மீனயதா யேகமாகுந்
தருவளம் பொலிகந்த மாதனச் சாரலிற்
றங்கிய விராமநாதர்
தம்மையுந் தன்னையுந் தொழுபவர்க் கிம்மையிற்
சகலசம் பத்து நல்குந்
திருமலி யிராமே சுரத்திற் பசுங்கிள்ளை
செங்கீரை யாடியருளே
சிற்பரம யப்பர்வத வர்த்தனியெ னச்சொன்மயில்
செங்கீரை யாடியருளே. (௯)

மந்த மா ருதமொரு புறத்தினி லுலாவநன்
மலர்மண மலிந்த பொழிலின்
மயில்களுங் குயில்களுங் கிளிகளும் வண்டுகளு
மருவுபண் பாடி யாடுங்
கந்த மாதனமதை நினைக்கினுங் காணினுங்
கண்களைக் கொண்டிராமன்
கட்டுதிரு வணையெனுஞ் சேதுத் தநுக்கோடி
கண்டு கடலாடினு
மெந்த மா பாதகமு மெட்டுணையு மில்லாம
லெட்கடங் காத தூர
மேகிடச் செயுமிரா மேசுரத் துன்பணி
யியற்றுமெந் துயரமெல்லாஞ்
சிந்த மா தரசியாய் முந்தநோர் வந்தநீ
செங்கீரை யாடியருளே
சிற்பரம யப்பர்வத வர்த்தனியெ னச்சொன்மயில்
செங்கீரை யாடியருளே. (௰)

அண்டமெட் டும் புகழ்ச் சேதுவிற் சங்கற்ப
மாற்றியுண் மூழ்கிமறைதே
ரந்தணர்க் குரியதா னங்கொடுத்துத் தர்ப்ப
ணஞ்செய்த மைந்த மட்டும்
பிண்டமிட் டுப்பிதிர் சிராத்தஞ் செய் வார்பெறும்
பேறிவள வென் றனந்தன்
பேசற்கு முடியாது கேட்டமட் டன்றிது
பிரத்தியக் கத்தில் யாருங்
கண்ட மட் டாமெனு மிராமே சுரத்தினிற்
கலைகள்பல கற்றுணர்ந்தோர்
கருதிய வரந்தருங் கந்தமா தனமலைக்
கற்பகம் பெற்றகனியே
தெண்டனிட் டடிதொழு மெமக்கருள் சுரக்குநீ
செங்கீரை யாடியருளே
சிற்பரம யப்பர்வத வர்த்தனியெ னச்சொன்மயில்
செங்கீரை யாடியருளே. (௫)

தறிபோல வசையாது சடமிருந் திடவதிற்
சாரும் புலன்க ளைன்குந்
தன்றொழி லிழுந்திடக் *காமமுதன் மூன்றையுந்
தாக்கித் தனித்திரண்டு
நெறியேகும் வளியைத் தடுத்துநடு நெறியிலே
நேர்செல விடுத்துயர்ந்த
ஞேய சமு கத்தினைத் தரிசிக்கு மானந்த
நிட்டையி னிலைத்திருந்து
குறியோடு குணமுங் கடந்தசிவ ஞானிகள்
குழாங்கொடு நெருங்குதவமே
குடிகொண்ட கந்தமா தனமுறுஞ் சேதுநற்
கோயிலிற் கடல்கொழிக்குஞ்
செறிவேய் பசுங்கதிர் திரண்டிடுந் தெய்வமணி
செங்கீரை யாடியருளே
சிற்பரம யப்பர்வத வர்த்தனியெ னச்சொன்மயில்
செங்கீரை யாடியருளே. (௬)

---

* காமமுதன் மூன்று - காமம், வெகுளி, மயக்கம்.

தன்னையறி வென்று மவ் வறிவி லானந்த மே
 தனியா யிருந்த சிவமாந்
தானென்று மதனைநேர் தரிசிக்க வொட்டாது
 தனைமறைத் ததனையேதான்
முன்னையுறு பாசமென் றுந் திரி பதார்த்தநிலை
 முழுதுமுணர் முத்தர் பல்லோர்
மோனநிலை யிற்றிறம் பாதுமொய்த் தமர்கின்ற
 முதுகந்த மாதனத்தின்
அன்னைசா னகிகணவ னாகிய விராகவ
 னருச்சிக்கு மவ்விலிங்கத்
தநுமன் வால்சுற்றிய தழும்புமூன் றென்றுமுள
 தாய வற் புதமமைந்த
தென்னைவா ணோங்கிய விராமே சுரத்தினிற்
 செங்கீரை யாடியருளே
சிற்பரம யப்பர்வத வர்த்தனியெ னச்சொன்மயில்
 செங்கீரை யாடியருளே. (எ)

வேறு.

நெறிசுரி கருமுகி லனையமலர்க்குழ
 னிளிரு புற மாட
நிலவிய சுட்டியொ டிலகிய பிறைநிகர்
 நெற்றி யசைந்தாட
வறியவர் பெறுமொரு நிதியென வருணிறை
 மலர்விழி மணியாட
மணநுகர் குணமலி நாசியு மதிப்பிடு
 வண்டர ளமு மாடச்
சிறியவ ருரைசெயு முறை முழு
 வது முட்செறியிரு செவியாடச்
சேது விரா மே சுரரொடு பேசுந்
 திருவாய் மலராட
வறிவினி லறிதரு குறிகுண மகல்பவ
 ளாடுக செங்கீரை
யலைவளர் வாள்விழி யலைவளர் காதலி
 யாடுக செங்கீரை.

மாவுயர் கதலி பலாவி னறுங்கனி
    வண்டே னொன்றாகி
மற்றை யொராறிங் கெற்றுக் கெனநனி
    வந்தே யங் கோடி
மேவு மணற்கே ணிகணிறை சேது
    வியன் றீரந்தேடி
மிகவளர் கந்த மாதன முன்றுவர்
    மென்று ளின் றாளி
யேவுக வெங்களை யெப்பணியுஞ் செய வென்றே
    யெம் போல்வ
ரெண்ணிலர் குழுமு மிரா மே சுரமுறு
    மெந்தா யிங் கேறு
சேவுயர் கொடியுடை யாருள மகிழ்பவள்
    செங்கோ செங்கீரை
சிலைதளர் வாணுதன் மலைவளர் காதலி
    செங்கோ செங்கீரை. (௯)

நகரமு மகரமு முடைபட வந்தரு
    ணங்கா யென்றோதி
நாடியி ராமே சுரநக ரெய்திய
    நந்தா யன்பாளர்
சகரவி கரமுற வகர வுருப் பெறு
    தண்டே னும் பாலுஞ்
சமமெனு மொழிபகர் சங்கரி யம்பிகை
    சங்கே யும் பாணி
நிகர்கரு நிறமறி கடலுறு சேதுவி
    னின்றே நன்பாக
நிலையுறு தானம் வழங்கியுண் மூழ்குநர்
    நெஞ்சா ருஞ்சூலி
சிகரிக ளுயரிய கோயிலி னமர்பவள்
    செங்கோ செங்கீரை
சிலைதளர் வாணுதன் மலைவளர் காதலி
    செங்கோ செங்கீரை. (௰)

---

இரண்டாவது செங்கீரைப் பருவம் முற்றிற்று:

ஆகப்பருவம் 2-க்கு செய்யுள் (20)

## மூன்றாவது

# தாலப்பருவம்.

ஒரு மொருமூ வகைத்தமிழு
முதிக்கும் பொதிய மலையுமுத்த
முள்ளே விளையும் பொருநைநதி
யுஞ்சி றுயர்பாண் டியனுடுங்
கூறு நூதியி ராயிரவெண்
கொம்பார் தெய்வக் குஞ்சரமுங்
குலவு சரியா தியநாற்கால்
கொண்ட வேதக் குதிரையும்பூந்
தேரு மிராமே சுரநகருந்
திருந்து மிடபஞ் செறிகொடியுந்
திகழ்மேவ காந்த நாதமெனச்
செப்பு முரசுஞ் செழுங்கொன்றைத்
தாருந் தசாங்க மாக்கொண்ட
தாயே தாலோ தாலேலோ
தருவ தனையும் பருவதவர்த்
தனியே தாலோ தாலேலோ. (க)

ஓங்குஞ் சேது வெழுநூற்றே
டொருமுப் பதியோ சனைதூர
முளதிச் சேது மூலதல
மொளிருந் தருப்ப சயனமதன்
பாங்கு பல்லா யிரந்தீர்த்தம்
பயிலு மவற்றைப் பகுத்துணர்ந்து
பகர்வ தரிது தநுக்கோடி
படிந்தா லப்பற் பலதீர்த்தந்
திங்கு தீர மூழ்குபலன்
சேரத் திரட்டி நல்கியருள்
செயுமி ராமே சுரத்திலருட்
செங்கோல் செலுத்திச் சீர்த்திநனி
தாங்குந் தெய்வப் பெண்ணரசாந்
தலைவி தாலோ தாலேலோ
தருவ தனையும் பருவதவர்த்
தனியே தாலோ தாலேலோ. (உ)

உருவ நோக்கி யிகழற்க
வொருவர் தமைப்பு மெனவுயர்ந்தோ
ருரைக்கு முரைக்கோ ரிலக்கியமா
வோங்கு நறுந்தீஞ் சுவையுடைத்தாய்ப்
பருக வூறுஞ் சிற்றாறல்
படுநீர்க் கேணி பாங்கரெலாம்
பயிலும் பெரிய கடற்கரைக்கட்
பதியுஞ் சேதுப் பதியென்னுந்
திருவி ராமே சுரத்திலமர்
தெய்வக் கொழுந்தே சிவபெருமான்
சிந்தை யினிற்றீட் டியவுயிர்ச்சித்
திரமே தேவ ராதியர்தஞ்
சருவ பாவ விமோசனஞ்செய்
தாயே தாலோ தாலேலோ
தருவ தனையும் பருவதவர்த்
தனியே தாலோ தாலேலோ. (௯)

மணித்தொட் டிலினிற் கிடந்தின்னு
மறையுங் காணு மலரடியின்
வண்மைப் பெரிய விரல்சுவைத்து
வாய்விட் டழுமுன் வந்தெடுத்துப்
பிணித்துக் கிடந்த முலைதிறந்து
பிசைந்து நிலத்தோர் பீர்விட்டுப்
பின்னர்ப் பணிலத் துண்ணிறையப்
பெய்த தீம்பால் பிறங்குசெவ்வா
யணித்திற் கொடுபோ யலகுநெறித்
தருந்தப் புகட்டி முத்தமிட்டெம்
மாவி யனையா யெனமேனை
யருமை பாராட் டிப்பசியைத்
தணிக்கத் தகுரா மேசுரத்தின்
றலைவி தாலோ தாலேலோ
தருவ தனையும் பருவதவர்த்
தனியே தாலோ தாலேலோ. (௰)

பண்முத் தமிழாற் பிரபந்தம்
பாடி யுயர்ந்த பாவலவர்
பலருங் கேட்க வரங்கேற்றிப்
படிக்குஞ் சேதுப் பதியொன்றே
யொண்முத் திக்கு வழிகாட்டு
முயர்ந்த தலமா மென்றுமுரா
சொலிக்கு மொலியு மணமுரசோ
டொண்சங் கொலிக்கு மொலியும்வெள்
வண்முத் தினுங் கடலொலியு
மலியும் வீதி வாய்ப்பவனி
மணஞ்செய் மலர்மா லிகையும்பொன்
மணிமா லைகளும் வணிந்துவருந்
தண்முத் தரும்பும் பவளவாய்த்
தாயே தாலோ தாலேலோ
தருவ தமையும் பருவதவர்த்
தனியே தாலோ தாலேலோ. (ரு)

வேறு.

இம்மையு மறுமையும் வேண்டுப
வர்க்கரு ளெம்பெரு மானார்தம்
மிருவிழி களிலொரு விழியெதிர்
குவியா வியல்பிற் றுதலினுஞ்
செம்மை நிரம்பிய நின்றிரு
முகமுயர் தெய்வத் தன்மைதிகழ்
செந்தா மரையென வாய்விழி
யந்தச் செந்தா மரைபூத்த
கொம்மை யமைந்தமர் நீலோற்
பலமுங் குமுதமு மேயென்னக்
குலவும் பச்சைச் சிறிய
குழந்தாய் கோதறு சேதுவினிற்
றம்மை யுணர்ந்தவர் தாமா
கியதாய் தாலோ தாலேலோ
சருவ சகத்தருள் பருவதவர்த்தனி
தாலோ தாலேலோ. (௬)

உளமல ரதிலுள் ளூறி யுவட்டா
வொண்சுவை மிகுதேனே
யுள்ள மினிக்குந் தெள்ளமு தேபத
முற்ற நறும்பாகே
களவியன் மலவிருண் முழுதற வருமதி
காலை யிளங்கதிரே
கண்மணி யேயுயர் பெண்மணி யேயருள்
கனிதரு கற்பகமே
யிளவெயின் மணியெறி கடல்வளை சேது
விராமே சுரமெய்தி
யெமைவழி யடிமைகொ ளெந்தை மணஞ்செய்
யிளம்பொன் னெழின்மலரே
தளரிடை யனநடை யுடைமட மயிலே
தாலோ தாலேலோ
சருவ சகத்தருள் பருவத வர்த்தனி
தாலோ தாலேலோ. (௭)

இந்தப் பரவணி செஞ்சடை யிறைவனை
யிரவிற் சந்தேக
வேவிய துங்கன விடைவே வாம
விருந்தது நீரிலெதிர்
முந்தச் சென்றது மொருமழ மகவை
முதலையின் வாய்நின்று
முன்ன ரழைத்ததும் வாரியி லொருகல்
முடுக வியக்கியது
மெந்தத் தேவரு முடியா திதுவென
வென்னைப் பெண்ணாக
வெழுவித் ததுமினி யெவ்வற் புதமு
மியற்ற விருப்பதுமாஞ்
சந்தச் செந்தமிழ் வளர்சே துவிலமர்
தருவே தாலேலோ
சருவ சகத்தருள் பருவத வர்த்தனி
தாலோ தாலேலோ. (௮)

வந்தகர் நெஞ்சினி லொருபொழு தாயினு
மருவாய் தாலேலேலோ
மாமா யையினை யகன்றார் விழியெதிர்
வருவாய் தாலேலேலோ
சந்த மெனப்பிர மன்மால் செயுமந்
சலியாய் தாலேலேலோ
தராதல முழுதுங் காத்தருள் புரியச்
சலியாய் தாலேலேலோ
சந்தசலி லகில சராசர மீன்ற
விருந்தாய் தாலேலேலோ
இராமே சுரநக ரெங்கணு வலத்தி
லிருந்தாய் தாலேலேலோ
சந்த மலர்த்திரு வாணி துதித்திடு
காதலி தாலேலேலோ
கலாபே தங்கள் கடந்திடு மலைவளர்
காதலி தாலேலேலோ. (௯)

வேறு.

கூறு தமிழுணர் வித்தகி தாலோ தாலேலேலோ
கூடு பசிய நிறக்கிளி தாலோ தாலேலேலோ
ஊறு புதுமது ரக்கனி தாலோ தாலேலேலோ
ஓது மறையரு ளுத்தமி தாலோ தாலேலேலோ
ஆறு சமய விளக்கொளி தாலோ தாலேலேலோ
ஆனை மருவு மடப்பிடி தாலோ தாலேலேலோ
தேறு மதிமிகு பத்தினி தாலோ தாலேலேலோ
சேரு பருவத வர்த்தனி தாலோ தாலேலேலோ. (௧௦)

மூன்றாவது தாலப்பருவம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் (30)

## நான்காவது

# சப்பாணிப் பருவம்.

இராகவன் பூசித்த வைங்கரக் கடவுளா
மிபமுகத் தெம்பிரானு
மிலவண புரத்திற் றிருக்கோயில் கொண்டிருந்
தெதிர்வந் திறைஞ்சியென்றும்
விராவுமன் பர்க்கெலா மிடையூறு சிறிதேனு
மேவா திதங்கருத்தில்
வேண்டிய வரங்கொடுத் தின்னருள் சுரந்திட
விளங்குமான் மியமலிந்த
புராதன மிகுஞ்சேது தீர்த்தி லெண்ணிலாப்
புலவரோ கவிகளாகிப்
பூசைசெ யிராமே சுரத்திறையை மருவிப்பல்
புவனப் பரப்பிலுள்ள
சராசர மனைத்துந் தரும்பச் சிளங்கிள்ளை
சப்பாணி கொட்டியருளே
சற்சனர் தொழும்பர்வத வர்த்தனி மகிழ்ந்தினிய
சப்பாணி கொட்டியருளே. (௧)

திருவணை யிராகவன் வகுக்கத் தொடங்கிமுன்
சிலையொன்ப தங்கையேந்திச்
செறிவுற நிறுத்தலா லவ்விடந் தன்னையே
திகழ்சேது மூலமென்று
மருவுநவ பாஷாண மென்றுஞ்சொல் வாரங்கு
வந்துகட லாடியதன்மேல்
வரியசக் கரதீர்த்த மாடியன் புற்றிரா மனைவணக்
கம் புரிந்தே
யருமைய ரியதர்ப்ப சயனத்தை யுங்கண்ட
வர்க்களவில் பாவமெல்லா
மரித்துப் பெரும்பிணி யகற்றிவீ டுங்கொடுத்
தருள்செயு மிராமநாதர்
தருவள ரிராமே சுரந்தரு கருங்குயில்
சப்பாணி கொட்டியருளே
சற்சனர் தொழும்பர்வத வர்த்தனி மகிழ்ந்தினிய
சப்பாணி கொட்டியருளே. (௨)

உத்தம மிருந்தமலை யத்துவச பாண்டியற்
கொருபெரும் புதல்வியாகி
யொளிருநவ மணிமகுட முடிபுனைந் துலகெலா
மோராழி செலவுருட்டி
முத்தமிழ் நடஞ்செயும் பொதிகைமலை தன்மருங்கின்
மூலமலை யாயிருக்க
முன்பெற்ற வரசியா மன்னைநின் றிருமுன்னர்
மும்முறை பணிந்தெழுந்து
சித்தமகி ழன்பர்க்கு நன்மகவளித்தருள்
செய்திடு மிராமநாதர்
தேவியா யாவியா மைந்தொழிற் குந்துணைச்
சிற்சத்தி யாய்ச்சிறந்து
சத்தமறி ராமேசுரத்திலுறு மம்மைநீ
சப்பாணி கொட்டியருளே
சற்சனர் தொழும்பர்வத வர்த்தனி மகிழ்ந்தினிய
சப்பாணி கொட்டியருளே. (௮)

ஒன்றுசேர்க் கும்பெரும் பொருளெனப் பிறவுமோ
ரொண்பொருள் விளக்குகின்ற
வுயர்கந்த மாதனச் சாரலிற் பன்மணி
யொதுக்குவா ரிதிபுலாய்ச்சூழ்
துன்றுசீர் பெறுமிரா மேசுரங் கைதொழுநா
துதிபல புகன்று சேதுத்
தூயசீர் பாடினு ளகேச னிகரெனத்
தொகுபெருஞ் செல்வம்வாழ்நா
ளென்றுமே காலவரை யறையின்றி யருள்புரி
யிராகவன் பூசைசெய்யு
மீசன்மலர் வாசன் றொழுபரம தேசனு
மென்றிடு மிராமநாதன்
றன்றுணைவி யாய்வருஞ் சிற்சுகோ தயவாரி
சப்பாணி கொட்டியருளே
சற்சனர் தொழும்பர்வத வர்த்தனி மகிழ்ந்தினிய
சப்பாணி கொட்டியருளே. (௯)

* ஒன்று சேர்த்தல் - கந்தம்; பெரும்பொருள் - மாதனம்; எனவே-கந்தமாதன மென்பதாயிற்று.

புண்ணியப் மெனும்பகுதி முப்பத் திரண்டும்
புரிந்திடு சிறப்புமுயர்பூம்
புகலியிலோர் பூசுரன் மழவிளம் பிள்ளையைப்
பொய்கையிற் கண்டுபுனித
முண்ணிலவு சிவஞான வமுதமுங் கொங்கைநின்
றொழுகுபா லுங்கலந்தே
யுண்ணுமா றின்னருள் சுரந்துதவும் வண்மையு
மொள்வளைக ளாலொருத்தன்
றிண்ணிய புயக்குவடு பத்திலும் வடுப்படச்
செய்யும்வன் றிறலுமிக்க
செங்கையம் பங்கையங் கொண்டுநீ செழுமதித்
தெண்ணிலா முற்றமாடத்
தண்ணிய வளம்பொலி யிராமே சுரத்தன்னை
சப்பாணி கொட்டியருளே
சற்சனர் தொழும்பர்வத வர்த்தனி மகிழ்ந்தினிய
சப்பாணி கொட்டியருளே. (௫)

தெய்வமட மங்கையர்கள் கற்பகப் பூமாரி
சேவித்து நின்றுகொட்டச்
செறியுநின் றோழியர்கள் சூழ்ந்துநின் றிருவுளந்
தேர்ந்திருகை கொட்டவாழு
மைவமென் றிந்திரை வாணிசசி வாய்த்துதிப
வலகெலாங் கொட்டமேன்மே
லுயரிரா மேசுரமு வந்தநின் கோயிலி
னொருங்குபே ரிகைகள்கொட்டக்
கைவருஞ் சேமக் கலங்கண்மட மெங்கணுங்
காலந் தெரிந்துகொட்டக்
காமியங் கருதா திறைஞ்சியா னந்தநீர்
கண்ணின்று மன்பர்கொட்டச்
சைவநெறி தழைபவருண் மழைபொழி பசுங்கொண்
சப்பாணி கொட்டியருளே [டல்
சற்சனர் தொழும்பர்வத வர்த்தனி மகிழ்ந்தினிய
சப்பாணி கொட்டியருளே. (௬)

### வேறு.

மோது கருங்கடல் வெண்டிரை வீசிய
முழுமணி முத்தங்கண்
மொய்த்திருள் பருகின நிலவு பொழிந்து
முயங்கி வயங்கிடவு
மீது தெரிந்தெதிர் தேடி யரும்பரி
செனவெள் வளையினமெங்
கெங்குந் திரிதிரு வீதியில் வருவா
ரிணையடி நோவாமற்
றூது மணங்கமழ் புன்னைகள் சொரிமலர்
தமனிய முறும்வெள்ளித்
தகடென மிளிரு மிராமே சுரமுறை
தாயே யிமயமலைக்
கோது தவிர்ந்திடு மன்னவன் மதலாய்
கொட்டுக சப்பாணி
குலமணி தருமுயர் மலைவளர் காதலி
கொட்டுக சப்பாணி. (௧)

நஞ்சினை யுண்டவ ரஞ்சில ரென்பது
நாடெங் குந்தெரிய
நகைவா யமுதஞ் சிறிதுளி ராம
நாதர் தமக்குதவும்
வஞ்சி யிளஞ்சிறு கொடியே பிடியே
மானே தேனேபொன்
மல்கு மிராமே சுரமுறு கந்த
மாதன வரையிலம
ரஞ்சினை யாறினை வென்றவ ரறிவினி
லறிவாய் நின்றொளிரு
மருமறை முடிவே யருவுரு வடிவே
யழகிய பொன்மலை
கொஞ்சிய மகவாய் வந்தருள் குயிலே
கொட்டுக சப்பாணி
குலமணி தருமுயர் மலைவளர் காதலி
கொட்டுக சப்பாணி. (௨)

மதிமர பினிலொரு மகளாய் வருநினை
    மருவு கொடிக்கயலை
வளர்தரு மினமென மதிலின் மதின்மேன்
    மாடத் துச்சியினி
லதிபொரு ளளவுசெய் திடநிறு வியமணி
    யமைபொற் கலசத்தி
லண்டமு மெண்டிசை யுங்கண் டெண்ணிட
    வகலமு நீளமுமே
றுதிபெற மிகுகோபு ரநவ நிலையிற்
    சூளிகை மாளிகையிற்
றோரண மறுகில் வாரிதி வெண்டிரை
    தாவுங் கயல்கண்மிகக்
குதிகொ ளிராமே சுரநகர் மாதுமை
    கொட்டுக சப்பாணி
குலமலி தருமுயர் மலைவளர் காதலி
    கொட்டுக சப்பாணி. (௯)

வேறு.

ஓவிய மேநடை கற்றெதிர் வந்திட லொப்போத
    வூற்றிடு சேது நகர்ப்பெரு மாட்டி யுரத்தோடு
மேவிய வேதன் முதற்பல விண்ணமர் மெய்த்தேவர்
    வெருவி விடத்தின் மெலிந்தடி தொழுது மிகத்தாழு
வாவி யளித்திடு மிறையுட னீமகி ழப்பாடு
    மடியவ ராமெமை வரதமொ டபய மளித்தாளக்
கூவிய தெனவளை முரலக் கொட்டுக சப்பாணி
    குற்றமில் பருவத வர்த்தனி கொட்டுக சப்பாணி. (ய)

நான்காவது சப்பாணிப்பருவம் முற்றிற்று.

ஆகச் செய்யுள் 40.

# ஐந்தாவது

# முத்தப்பருவம்.

——:o:——

கதலி யுடும்புத் தலைகொக்குக்
கமலஞ் சாலி கமுகுபுயல்
கயல்வேய் கேழற் கொம்புசங்கு
கரும்பு கரிக்கோ டாதிபல
வுதவு முத்த மிறுகன்முத
லுரைக்குங் குற்றம் பலவுடைத்தீ
தொன்றோ விலைப்பட் டேரெங்கு
மூலாவித் திரியு முதைவிரும்பே
மிதமார் மலர்கள் பலதூவி
யிலிங்க மாகின் னிறைவர்தமை
யிராமே சுரத்திற் கண்டிறைஞ்சி
யேத்தி நின்னை யெங்களுக்குச்
சதநீ யென்பார்க் கருள்செயுநின்
றமிழ்வாய் முத்தந் தருகவே
தலைவ ரிடமார் மலைவளர்கா
தலியே முத்தந் தருகவே. (க)

முடிதொட் டமர ருலகளக்கு
மூங்கின் முத்த மிப்பிமுத்த
மொய்ம்பார் யானை மருப்புமுத்த
முதிரும் பன்றிக் கொம்புமுத்தம்
வெடிபட் டறுப்பட் டொடிபட்டு
மேனி வெளுத்துக் கீழ்வீழ்ந்து
மிகநா ளுட்கொண் டிருந்ததெவர்
விரித்துச் சொல்லார் பகுத்தறியார்
தொடிதொட் டொளிர்கை யரமகளிர்
சூழி ராமே சுரத்தமுதே
தொழுவார் வறுமைக் களியிருளைத்
தொலைக்குஞ் சுடரே நீருண்டு
தடிபட் டொளிர்கார்க் குழலாய்நின்
றமிழ்வாய் முத்தந் தருகவே
தலைவ ரிடமார் மலைவளர்கா
தலியே முத்தந் தருகவே. (உ)

காலமுணர்ந்து தாயிரு
கணைக்கால் கிடத்தி நறுங்கலவை
கமழு மஞ்சட் காப்பணிந்து
காயு மிளவெந் நீராட்டி
நீல விழிக்கண் ணீருந்தி
நெஞ்சோ டணைத்து நெற்றியில்வெண்
ணீறிட் டதன்மேற் றிகழ்சாந்த
நிகழ்பொட் டிட்டு நேர்நோக்கிக்
கோல முலைப்பா லூட்டியருள்
குலவு மயிலே குயிலேயெங்
குறைபா டகற்ற வந்தருளுங்
குழந்தா யென்றுட் கொள்ளுமன்பு
சால விராமே சுரத்தில்வளர்
தாயே முத்தந் தருகவே
தலைவ ரிடமார் மலைவளர்கா
தலியே முத்தந் தருகவே. (௯.)

மே[illegible]மருவு முத்தெனக்கார்
மேய குழலிற் றொங்கலிடும்
வெண்மணித் திலக்கோவைச்சரமு
மின்பாய் சுட்டி யணிநுதலும்
பாக மதியு மணிக்குழைகள்
பதியுஞ் செவியு மதையெதிர்த்துப்
பார்க்குங் கருணை பொழிவிழியும்
பயிலு மூக்கி னணிமணியு
மேக போக மாயிருக்கு
மிராம நாத ருளமகிழு
மிராமே சுரத்திற் காணுமன்ப
ரிடையூ றென்று மெய்தாமற்
றுக சோகந் தவிர்த்திடுநின்
றமிழ்வாய் முத்தந் தருகவே
தவத்தோர் பரவும் பருவதவர்த்
தனித்தாய் முத்தந் தருகவே. (௰)